குயில்

கிழமை இதழ்

ஆசிரியர்

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 5 — 5 — 59 செவ்வாய் | இசை: 48

தூங்கும் புலி எழுந்தது!

★ ★

தூங்கும் புலியைப் பறைகொண் டெழுப்பினோம்
தூய தமிழரைத் தமிழ்கொண் டெழுப்பினோம்
(தூங்கும் புலி)

தீங்குறு பகைவரை இவணின்று நீக்குவோம்
செந்தமிழ் உணர்ச்சி வேல்கொண்டு தாக்குவோம்
(தூங்கும் புலி)

பண்டைப் பெரும்புகழ் உடையோமா? இல்லையா?
பாருக்கு வீரத்தைச் சொன்னோமா? இல்லையா?
எண்டிசை வாய்மையால் ஆண்டோமா? இல்லையா?
எங்கட்கும் இங்குற்ற நரிகளால் தொல்லையா?
(தூங்கும் புலி)

தமிழ்காப்போம் என்றோம்; எழுந்தாரா? இல்லையா?
தமிழுக் குயிர்தர இசைந்தாரா? இல்லையா?
தமிழ்வாழ்ந்தால் தமிழர் வாழ்வார்கள் என்றோம்
தமிழர் மார்தட்டி வந்தாரா? இல்லையா?
(தூங்கும் புலி)

செந்தமிழ் நெஞ்சம் கொதித்ததா? இல்லையா?
தில்லி நரிதான் நடுங்கிற்றா? இல்லையா?
முந்தாநாள் விட்ட பிஞ்சுகள் தமிழை
முறிக்க எண்ணுதல் மடமையா? இல்லையா?
(தூங்கும் புலி)

தமிழர் ஒற்றுமை நிறைந்ததா? இல்லையா?
தக்கைகள் ஆட்சி சரிந்ததா? இல்லையா?
தமக்குத் தமிழகம் அடிமையே என்னும்
சழக்கு மரவேர் அறுந்ததா? இல்லையா?
(தூங்கும் புலி)

புதுச்சேரி, தி. வ. ஆ. ௧௯௯௦ சித்திரை ௨௨

தொன்மை ஆராய்ச்சி IV

தமிழ் அகர வரிசையில் மெய்யை முதலாகக் கொண்ட சொற்களே அதிகம். அவை எல்லாம் உயிர்முதற் சொற்களினின்றே வந்தவை என்பது அறியத்தக்கது.

உயிர் இனத்தைத் தலையிற் கொண்ட சொற்களுள் பல, தலையடிச் சொற்கள், மெய் இனத்தைத் தலையிற் கொண்டவை யாவும் வழிச்சொற்கள்.

இதனால், "உலை" என்ற சொல்லே தகரமாகிய முதனிலை பெற்றுத் துலை என வந்தது. அது துலைதல் - மிகவிரிந்து சேய்மைக்கண் செல்லுதலைக் காட்டுகின்றது.

துலை என்னும் சொல் தொல் என்றும், தொன்மை என்றும் நின்று காலத்தால் சேய்மையை அதாவது பழமையை விளக்குகின்றது எனக் கண்டு மகிழ்க.

இனித் தொன்மை என்னும் சொல்லின் வரலாற்றைக் கொண்டே தமிழின் தொன்மையை விளக்க முடியும்.

தொன்மை என்னும் இச்சொல்லுடன் பிறந்த தமிழ்ச்சொற்கள் பல ஆரியத்திலும் காணப்படுகின்றன. ஆரியம் மிகத் தொன்மையான மொழி என்று பிதற்றுவர். அம்மொழியில் வருகின்ற பல சொற்கள், நம் தமிழ்ச்சொற்கள் பலவற்றிற்கும் பிற்பட்டவை என்ற உண்மையை இத்தொன்மை ஆராய்ச்சி கொண்டே காட்ட முடியும். நம்தொன்மை முதலிய சொற்களின் அடிகளே ஆரியச்சொற்கள் பலவற்றினுக்கும் தோற்றுவாய் தந்து நிற்கின்றன. அவற்றுள் இங்கு ஒரு சில எடுத்துக் காட்டப்படும்.

துலை என்னும் பெயர்ச்சொல் சுழன்று வீசுவது என்றும், உலாஞ்சுவது என்றும் அடிப்பொருள் கொண்ட நிறைகோலையும் ஏற்ற மரத்தையும் குறிக்கும் என்று கண்டோம். வடமொழியில் வரும் "ந்துல்" என்னும் சொல்லின் அடி எது? அந்த "ந்துல்" என்ற சொல்லுக்குச் சுழலுதல், ஊசலாடுதல் உலாஞ்சுதல் என்றே பொருள் கூறுகின்றனர். அன்றியும் அதினின்று பிறக்கும் சில சொற்களும் ஊசல் என்பதையே குறிக்கின்றன. ஆயின், அவற்றிற்கு வடவர் அடிச்சொல் இன்னதென்று கூற வேண்டும். கூறுகின்றார்களா? ஏன்? அவைகளின் உண்மையான அடிச்சொல் நம் தொன்மைத் தமிழ்மொழியான உலவு என்பதே அன்றோ?

சுழலுதல் என்ற பொருளுள்ள உலவு என்னும் முதற்சொல் தகரமெய்யை முதலில் கொண்டதனால் துலை (துல) என்றாகிச் சுழன்று வீசுதலைக்குறித்து நிற்க, அத்துலைச் சொல்லையே வடமொழியாளர் தம் சொல்லுக்கு அடியாக்கிக் கொண்டனர். உலவு என்னும் சொல்லைப் போலும் அடிப்படையான சொற்களை ஆட்சியிற் கொண்டிருக்கின்ற நம் தமிழானது வழியடிகளையே பெரும்பான்மை வழங்குகின்ற மொழிகட்கு முற்பட்டதாதல் வெளிப்படை.

அவ்வாறே. நிறுத்தலையும், ஒத்திருத்தலையும் குறிக்கின்ற துல், தூல் என்ற வடமொழியின் வினையடிகளும் நம் உலவுச் சொல்லிற் பிறந்தவைகளே என்க. துலா, துல்ய என்னும் சொற்களும் துல், தூல் என்றவடமொழி அடிகளோடு ஒற்றுமை பூண்டனவாய்க். கிரேக்கம் இலத்தீனியம் ஆகிய பிற ஆரிய மொழிகளில் உள்ள பல சொற்களை எடுத்துக் காட்டுவர் சொற்பிறப்பு நூல் வல்லார். ஆகலான் நம் "உலவு" என்னும்தலையடி. கிரேக்க இலத்தீனிய மொழிகளில் வழங்குகின்ற பலசொற்களுக்கும் முற்பட்டது என்பது தேற்றம்.

இவ்வாறே ந்தூர என்னும் சொல்லை உணாதி சூத்ரகாரர் இ என்னும் அடியினின்று பிறந்ததென்று கூறிப் பிழைத்தார். உண்மையில் அது துலை என்ற நம் தமிழடியையே அடியாய்க்கொண்டு சேய்மையைக் குறிக்கும்.

துலையும், தூரமும் ஒரே அடியாய்ப் பிறந்த சொற்களே.

தூரம் பழைய தமிழ்நூல்களுள் அதிகமாகப் பயிலுகின்றது காண்க. பிங்கலந்தையில் இச் சொல் எடுத்தாளப்பட்டுள்ளது.

"மிக்க தூரிதன்று பாண்டியனது செல்வ மிக்க ஊர்" — என்பது சிலப்பதிகாரம் (13, 133) உரையில் வருகின்றது.

"இல்லிடத்தினின்று தூரிய இடத்தில்"— என்பது கலித்தொகை 110ஆம் பாட்டின் உரை.

வடமொழித் தூரிய என்னும் நான்காவது என்னும் பொருள்தரும் சொல்லும் நம் துலை என்னும் தமிழ்ச் சொல்லே.

நான்கு என்பது மூன்றிற்குத் துலைப் பட்டது. ஆதலால் அதனைத் தூரீய என்று வைத்துக் கொண்டனர் வடமொழியாளர். நம் நான்கு என்னும் சொல்லுக்கும் நீண்டது என்பதே பொருளாதலை நோக்குக.

குயிலில் ஐந்து வாரமாகத் தொன்மை ஆராய்ச்சி நீண்டுவிட்டது. இத்தொன்மை யாராய்ச்சியால் நாம் உணர்ந்து மகிழத் தக்கவை எவை?

உலவு முதலிய தமிழ்ச்சொற்கள் மிகப்பல தமிழ்ச்சொற்களைத் தோற்றுவிப்பவை என்பது கண்டோம்.

அது மட்டுமன்று—

உலவினால் தோன்றிய துலை முதலிய சொற்கள், வடமொழியின் பலசொற்களுக்கும் கிரேக்கம் இலத்தீனியம் முதலிய சொற்களுக்கும் தோற்றுவாய் என்பது கண்டோம்.

இதனால் பழங்காலம்என்னும் இருட்டறையில் தமிழுணர்வு என்னும் விளக்கோடுபுகுவோமானால் நாம் காண்பது வடமொழிக்குத் தாய் மொழி தமிழ்மொழியே ஆகும் என்பதுதான்.

இந்நாள் சமஸ்கிருத பரீஷத்காரர்களும் சட்டர்ஜிகளும், நேருஐயர் ஆட்சி வலிவைக் கையில்வாங்கிக் கொண்டு தமிழைஅழிக்க அவர்கள் கையாளும் முறைகளில் முதன்மையானது என்ன தெரியுமா?

> மொழி ஆராய்ச்சி செய்யும்போது எந்தச் சொல்லுக்கும் காரணம்தேடக் கூடாது, ஒரு சொல்லின் வேர்ச்சொல் எது என்று ஆராயக்கூடாது !

என்று கட்டளை போடுகின்றார்கள் ஏன்?

> ஒரு சொல்லின் வேர்ச்சொல் இன்னதென்று ஆராய்ந்தால், சமஸ்கிருதச் சொல் எல்லாம் தமிழ்ச் சொல்லினின்று வந்தவை என்பது வெட்ட வெளிச்சமாகிவிடும் !

தமிழ் வாழ்க!

எழுதுவோர்க்கு

குயிலுக்கு எழுதியனுப்புவோரிற் பெரும் பான்மையோரின் கட்டுரையையும், பாட்டையும் நாம் திருத்தி வெளியிடவேண்டும். இந்தத் தொல்லையை நாம் தொல்லையாகக் கொள்வதில்லை. இன்பமாகவே எண்ணிச் செய்து வருகின்றோம்.

ஆனால், திருத்தப்பட்ட இடங்களை, எழுதுவோர் உற்றுநோக்க வேண்டுமன்றோ!

அப்படி அவர்கள் செய்வதாய்த் தெரியவில்லை. அதேபிழையை மீண்டும் செய்கிறார்கள்.

அதற்காக அவர்கள் என்ன செய்ய வேண்டும் ?

குயிலுக்கு எழுதியதுபோல் மற்றொரு படி எடுதது வைத்துக் கொள்ளவேண்டும். நாம் திருத்தி வெளியிட்டதோடு அதை ஒத்திட்டுப் பார்க்கவேண்டும் அப்போது பிழை இன்னதென்று தெரியும். திருந்த வழியேற்படும். அதைவிட்டு,

திருத்தி வெளியிட ஆளிருக்கின்றான் நாம் திருந்த வேண்டிய தேவை இல்லை என்பார் எழுதுவதை நாம் வெளியிடமாட்டோம் இனிமேல் !

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

சாரீர வீணை

இதில் உள்ள வீணை என்பது வினை யென்பதின் திரிபு. இவ்வாறு ஆரியர் திரித்தனர். இதனைக் கீழ்வரும் தமிழ்ப்பொழில் (துணர் ௩௫. மலர் ௧.) இசைப்புலவர் ப. சுந்தரேசன் குடந்தை எழுதியுள்ள குரல்வினை என்னும் ஆராய்ச்சிக் கட்டுரையால் அறிக.

குரல் வினை

நமது இசைத் தமிழில் பல்வேறு (செய்கைகள்) வினைகள் உண்டு. அவற்றுள் முதன்மையானது குழற்கருவி வினைகள். அடுத்தது யாழ்க்கருவி வினைகள். மூன்ருவது குரல் வினைகள் என்பதாம். இக் குரல் வினைகள் மக்கள் தனது குரல் (சாரீரம்) ஒன்றினுல் மட்டும் வினை (பாடுதல்) செய்து தொழில் புரிவது எனப்படும். இவ் வினைகளிலும் பல்வேறு பிரிவுகள் உண்டு.

பாண் என்ற சொல், பாட்டு என்ற பொருளையே சிறப்புறத் தரும். அத் தொழிலைப் புரிபவர் பாணர் எனப் பண்டைய காலத்தில் வழங்கப் பெற்றனர். அப்பாணர்களுள்ளும் பெரும் பாணர்கள் எனவும், சிறு பாணர்கள் எனவும் இருவேறு பிரிவினர் இருந்தனராம். இவர்கள் தங்கள் தொழிலுக்கேற்ற வகையில் பேரியாழ்க்கருவியையும். சீறியாழ்க் கருவியையும்வைத்திருந்தனர்; பாடற்ருெழிலையே தங்கள் குலத்தொழிலாகக் கொண்ட இம் மரபினர் யாவருக்கும் இசைத்தமிழே முதன்மையாகக் கொள்ளக் கிடந்தது. இசைத் தமிழினையொட்டிய இயற்றமிழும் நாடகத் தமிழும் இவர்களது தொழிலோடு ஒன்றிக்கிடந்தது எனலாம்.

தொழில்முறைகள் எதுவாயினும் அதனைத் தொழிற்படுத்தும் முறைகளை, வினைபுரிதல் அல்லது வினைசெய்தல் எனப்பட்டு அதனைத் தெளிவாக. அச்சொல்லோடு அம் விகுதி சேர்த்து வினையம் எனவும் கூறப்பட்டது. இம்முறையில் குழல்வினை, யாழ்வினை, குரல் வினை எனப்பட்டும், குழல்வினையம், யாழ்வினையம், குரல்வினையம் என வழங்கியிருத்தல் கூடும்.

இவ் வினைகள், குழலாசிரியர்களுக்கும் யாழாசிரியர்களுக்கும் அவரவர்கள் கைக்கொள்ளும் கருவிகளைப்பற்றியே நிகழ்வதாகும். ஆயினும், இசையாசிரியர்களுக்கோ (கண்டப் பாடல்) மிகமிக (ஒரே குரலில்) இன்றியமையாததாக இவ்வினைகள் உணரப்பட்டன. ஏனெனில் - கருவியாளர்கள் யாவரும், தனது கைவிரல்களால் குழற்கருவியில் துளைகளை அடைத்து விடுவதால் வினைகள் புரியக்கூடும். யாழ்க்கருவியில் விரல்களால் நரம்புகளைத் தெறிக்கும் முறைமையில் வினைகள் புரியக்கூடும். அத்தகைய எல்லா வினைகளும் ஒருவர் தனது ஒரே குரலினுல் (கண்டத்தால்) காட்டுவது என்பதுமிகவும் இன்றியமையாததல்லவா? இதனை, மிகப் பழங்காலத் தமிழ்மக்கள் நன்கு நிரம்ப உணர்ந்திருந்தமையினுலேயே சிலப்பதிகாரத்தில், இசையாசிரியனமைதி பகரவந்த நம் இளங்கோவடிகளும்,

"யாழுங் குழலுஞ் சீரு மிடறுந்
தாழ்குரற் றண்ணுமை யாடலொ டிவற்றின்
இசைந்த பாடல் இசையுடன் படுத்து
வரிக்கு மாடற்கு முரிப்பொரு ளியக்கித்
தேசிகத் திருவி னோசைகடைப் பிடித்து
தேசிகத் திருவி னோசை யெல்லா
மாசின் றுணர்ந்த வறிவின னாகிக்
கவியது குறிப்பு மாடற் றொகுதியும்
பகுதிப் பாடலுங் கொளுத்துங் காலை
வசையறு கேள்வி வகுத்தனன் விரிக்கும்
அசையா மரபின் இசையோன்........."

எனத் தெளிவுபெறுமாறும் உய்த்துணருமாறும் மிக்க ஆழ்ந்த கருத்தோடு கூறிப்போந்தார்.

இப் பதினொரு அடிகளையும் உணர்ந்த அரும்பத உரைகாரர் கூறுவது.

"யாழ்ப்பாடலும் வங்கியப்பாடலும், இருவகைத் தாளக் கூறுபாடுகளும் மிடற்றுப் பாடலும், மந்தமாகிய சுரத்தினையுடைய தண்ணுமை

யும், அகக்கூத்துப் புறக்கூத்தும் பதினோராடலென்னுங் கூத்துக்களும் வல்லனாய், இவற்றுடனே சேரச்செய்த உருக்களை இசை கொள்ளும்படியும், இரதம் பொருந்தும்படியும் புணர்க்கவும் வல்லனாய், இருவகைப்பட்ட பாடல்களுக்கும் இயக்கம் நான்கினையுமமைத்துத் தேசாந்தரங்களிற் பாடைகளையுமறிந்து, அந்தப்பாடைகள் இசை பூணும்படியையுமறிந்து இயற் புலவனினைவும், நாடகப் புலவன் ஈடும் வரவுகளும், இவற்றுக்கடைத்த பாடல்களும் தம்மிற் சந்திக்குமிடத்துக் குற்றந் தீர்ந்த நூல் வழக்காலே வகுக்கவும் விரிக்கவும் தொகுக்கவும் வல்லவனாயுள்ள இசைப் புலவன்.........'' என்பதாம். மேலும் இதனை ''இது பொழிப்புரை'' எனவும் கூறிவிட்டார்.

இதே பொழிப்புரையை அடியார்க்கு நல்லார் என்பார் அப்படியே எடுத்துக்கொண்டு கையாளுகின்றார். இவர் உரையைப் பதிப்பாசிரியர் பதிப்பிக்குங்காலத்து தொகுக்கவும் என்றசொல் விடுபட்டுவிட்டது. சிலப்பதிகார முதற்பதிப்பில் அரும்பதவுரையில் தொகுக்கவும் என்ற சொல் இருப்பது மிகவும் சிறப்புடையதாகும். நிற்க. சிலப்பதிகாரம் ஆரும்பதிப்பில் அரும்பத உரையிலும். தொகுக்கவும் என்ற இச் சொல்லை விட்டுவிட்டனர் ஆக, தொகுக்கவும் என்ற முதற்பதிப்புச் சொல் மிகவும் இன்றியமையாததாகும் என்பதனைமட்டும் இங்கே வற்புறுத்துகின்றோம்.

இவ்வாறு சில ஏடுகள் செல்லச்செல்ல சரீரவினை என்ற சொல், அத்துணைப் பொருத்தமுடையதாகத் தோன்றாத காலத்தில், மெல்ல, னை என்ற இருசுழி னைகாரம் முச்சுழி ணைகாரமாயிற்று. இப்பொழுது. சரீரவீணை என்ற அளவிற்கு. ஒரு உடம்பையே வீணையாகக் கொள்ளத்தக்க பொருளில் அமைந்துவிட்டது. என்னே விந்தை! குரல்வீணை என்ற சொற்களைத் தெளிவுறுத்தவேண்டி எளிய முறையில் அடியார்க்கு நல்லாரால் சாரீரவினை என்றுகூறப்பட்ட பகுதி. சரீரவீணை என்ற மாறுபாடு கொண்டது. சில ஏடுகளில் மட்டுமே இம்மாறுபாடு இருந்து வந்ததால், (அல்லது ஒரு ஏட்டுப் பிரதியில் மட்டும் இவ்வாறு இருந்திருக்கக்கூடும்) பதிப்பித்த ஐயரவர்கள் இதனை விடாது ''சரீரவீணை என்றும் பிரதிபேதமுண்டு'' என உடுக்குறியிட்டு எடுத்துக் காட்டினார்கள், இவ்வாறு பிரதிபேதம் காட்டினமையினாலே நாம் ஓர் ஒப்பற்ற உண்மையை நன்கு சிந்தித்து உணர முடிந்தது. இஃதிவ்வாறிருக்க, சிலப்பதிகார ஆரும்பதிப்பில், சாரீரவினை என்ற மூலத்தையே. சாரீரவீணையாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது, இத்தகைய சிறுபகுதிகள் யாவும் நன்கு ஊன்றி உணரப்படாது வருவதும் நம் பண்டைய தமிழின்னீர்மை கெடுவதற்கு வழிகோலி விடுவதாகின்றது.

ஆக குரல்வினை, படாதபாடுபட்டு ஓரளவு தனது பழமையையும் திரிபையும் காட்டி ஓட்டிக் கொண்டிருப்பதனை நாமும் ஓரளவு உணர்வோமாக.

குரல்வினை யென்ற சாரீரவினை என்பது, மிகப் பழைய காலத்தும் வாய்ப்பாட்டினையே குறித்ததாகும். வாய்ப்பாட்டுப் பகுதிகள் பலவுண்டு. அவற்றைப் பொதுவாகக் கண்டப்பாடல் எனக் குறிப்பதும் பண்டைய வழக்கே. இவ்வழக்கு சிறப்பாக குரலினால் (செய்யப்படும்) புரியப்படும் வினைவகையில் ஆளத்தி முறையையே குறிக்கப்படுவதாயிற்று. (இதன் பகுதிகள் யாவும் நாம் எழுதும் ''ஆளத்தி'' எனும்கட்டுரையில் விரிவாகக் காணலாம்,)

நிற்க, இப்பகுதிகளில் வரும் சீரிய தமிழ்ச் சொல்லாம் மிடறும் என்ற இளங்கோவடிகளின் சொல்லிற்கு, வாய்ப்பாட்டு என்று இக்காலம் பொருள் கொள்ளக்கிடக்கின்றது. இவ்வாய்ப்பாட்டு வினையைத்தான் குரல்வினை, எனக்கூறப்பட்டது.

இச் சொல்லிற்கு அரும்பதவுரைகாரர், ''மிடறுமென்றது, மூலாதாரந் தொடங்கிய மூச்சைக் காலாற் கிளப்பிக் கருத்தாலியக்கி ஒன்றெனத் தாக்கி இரண்டெனப் பகுத்துப் பண்ணீர்மைகளைப் பிறப்பிக்கப்பட்ட பாடலியலுக்கு அமைந்த மிடற்றுப் பாடலுமென்றவாறு'' என ஆழ்ந்ததொரு பொருளினை விளக்கித் தந்தருளினார்.

அடியார்க்கு நல்லாரே, "மிடறுமென்பது சாரீர வீணையுமென்றவாறு" எனக்குறித்தார். சாரீரம் என்றால் குரல் என்பது இக்கால மக்களும் நன்கறிந்தேயுள்ளனர். குரல்வீணை என்ற சொல்லின் பகுதியினை நன்கு சிந்தித்துணர்ந்த அடியார்க்கு நல்லார், எழிசைகளில் குரல் எனும் இசையொன்று உள்ளதையும் உள்ளத்திற்கொண்டு, குரல்வீணை எனக்கூறினால் அது குரல் என்ற இசைக்குரிய ஏதோ ஒரு வீணையாகக் கருதிவிடாதிருக்க வேண்டி குரல் என்பதனை, இடத்திற்கேற்ற வாறு சாரீரம் எனத்தெளிவுபடுத்துவான் வேண்டி இவ்விடத்தில் குரல்வீணை என்பதைச் சாரீரவீணை எனக்கூறி வைத்தார்.

சாரீரவீணைஎன்ற இச்சொல்லும் ஏடெழுதுவோரால் சா வன்னா ச னாவாகி. வி னா வீ யன்னா வாகி, ணையன்னா ணாயன்னாவாகி, நாளடைவில் சாரீரவினை, சரீரவீணா ஆயிற்று. அதாவது, சாரீர வினை என்ற சொற்களின் முதலெழுத்து சா என்ற நெடில், குறிலாக ச ஆனால் சரீரவினையாகும். பின் வி என்ற குறில் நெடிலாக வீ என மாறினால் சரீரவீணா ஆகும்.

பட்டியல் தொகை அனுப்பாது "குயில்" வளர்ச்சியைக் கெடுக்கும் நாணயமற்ற விற்பனையாளர்கள் :

1. **புதுமை இலக்கியப் பண்ணை,**
91/6, ஒல்பேந்தால் தெரு, கொழும்பு 13.

2. **பி. கா. பழனிசாமி,**
நகை வியாபாரம் திருப்பத்தூர் (வ. ஆ.)

(தொடரும்)

நினைவுறுத்துகிறோம்.....

இயற்பெயரோ அன்றி புனைபெயரோ இன்றி வெளிவரும் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்படுபவையே.

விற்பனையாளர்கட்கு !

இதுவரை நமக்குச் சேரவேண்டிய பட்டியல் தொகையை அனுப்பாதவர்களுக்குக் "குயில்" ஆண்டுமலர் அனுப்பப்படமாட்டாது

ஆண்டு மலருக்கு விளம்பரங்கள் வாங்கி அனுப்புகிறவர்களுக்குத் தக்க கழிவு தரப்படும்.

— அமைச்சர்.

பாலும் மேலாடையும்

சில ஆண்டுகளுக்கு முன்பு நான் நடத்திய கண்காட்சியில் இயந்திரவிசை பொருத்தப்பட்ட இரு எஃகு பொம்மைகளை நிறுவியிருந்தேன். அவற்றில் ஒன்று ஆண் மற்றொன்று பெண்

ஆண் பொம்மையின் பையில் ஓர் அணா இட்டு விசையை இயங்கச்செய்தால் சுவைமிக்க சூடான ஒருகுவளை பாலோ அன்றிக்காப்பியோ கிடைக்கும். பெண் பொம்மையின் தலையில் ஓர் அணா இட்டு விசையை இயங்கச் செய்தால் அது தன் மேலாடையை விலக்கிக்காட்டிவிட்டு மீண்டும் போர்த்திக் கொள்ளும் கண்காட்சியின் முடிவில இவ்விரண்டின் வருவாயைக் கணக்கிட்டுப் பார்த்ததில் ஆணைவிடப் பெண் இருபது மடங்கு அதிக வருவாய் பெற்றிருந்தது.

— ஜி. டி. நாயுடு
(பேச்சுக்களிலிருந்து)

<★>

இதுபோதாதா?

தமிழ் மொழி பேசும் தென்னாட்டவரைத் தமிழரென்றும், அவர்தம் நாட்டைத் தமிழகம் என்றும் சுமார் 2000 ஆண்டுகட்கு முன்னரேயே 'தாலமி' என்னும் கிரேக்க ஆசிரியர் குறித்துப் போந்தனர்.

— **கா. சுப்பிரமணியப்பிள்ளை எம். ஏ. எம். எல்.**
'தமிழர் சமயம்'

<+>

திருவளர் நாவரசு - சரசுவதி மக்கள்

அறிவுடைநம்பி, அமுதவல்லி, பாண்டியன்

காதணிவிழா வாழ்த்து

(பாரதிதாசன்)

அரசுபெறு தமிழகம் அதற்கென்று பெற்ற
சரசுவதி நாவரசு - எனுமிவர் தந்த
அறிவுடை நம்பி, அமுத வல்லி,
பாண்டியன் என்னும் பசுங்கிளி கட்குக்
காதணி விழாஒன்று காணும் இந்நாள்,
எனக்குப் பெரியதோர் இன்பநா ளாகும்!

ஏனெனில், பெற்றோர் இருவரும் பெற்ற
மூவரும் என்றன் பேரர் ஆவர்!

இன்று வரைக்கும்யான் இந்நாட் டுக்குப்
பதினான்கு பேரரைப் படைத்துளேன் தொண்டராய்த்!
தமிழகம் மீண்டபின் தமிழர் காணும்
படையில் பதினான்கு வீரர்என் அருமைப்
பச்சைத் தமிழர் பட்டா ளத்தார்!

இதனை எண்ணும்என் முதுமை இந்நாள்
இளமையா கின்றது: மகிழ்வெய்து கின்றேன்!

காதணி பெறுக! கல்வி நிறைக!
இல்லறம் காண்க! செல்வம் பெறுக;
குமரித் தமிழர் வாழ்வில் குறுக்கிடும்
பார்ப்பை விடாமல் பதற டித்துப்
பெரும்புகழ், பெறுக! அறிவுடை நம்பி,
அமுத வல்லி பாண்டியன்
தமரொடு தமிழொடு வாழ்க தழைந்தே!

என் ஆசை

பாரதிதாசன்

தமிழர் தூங்கிய நாளில் ஆரியர்
தமிழில் ஆரியச் சழக்கைச் சேர்த்தனர்;
தமிழர் விழித்தஇந் நாளில் ஆரியர்
"ஆரியக் கலப்பிலாத் தமிழும் உண்டோ?"
"தமிழுக் காரியம் தாய்எனல் பொய்யோ?"
என்று தமைமறந் தியம்பு கின்றனர்.

* * *

இமையம் தொடங்கிக் குமரி வரைக்கும்
தமிழரே தழைந்து வாழ்ந்தஅந் நாளில்
பிழைக்க வந்த பிச்சைக் காரர்கள்
இந்நாள் தமிழரை நோக்கி இயம்புவர்:
"வண்தமி ழர்க்கொரு வரலா றுண்டோ?"
"வாழ்க்கை முறையொன்று வாய்ந்ததுண்டோ?"

* * *

ஆரியர் ஆணவ மிக்க ஒற்றுமை
வாய்மை என்பதன் வலியையும் அடக்கித்
தீய வழியே சென்று தாயக
ஆட்சியை அடைந்த தாயினும் வாய்மை
சாகா தென்பதைச் சழக்கர் அறியார்;
சாகாத் தமிழத் தலைமுறை அறியும்!

தமிழகத் தையும் தமிழையும் மீட்கத்
தமிழர் ஒற்றுமை தாங்கி எழுந்தனர்;
ஆரியர் அதுகண் டலறு கின்றனர்
அதனு லன்ருே "எம் ஆரியந்தான்
தனிமொழி தனிமொழி! யாமே தக்கவர்
ஆரியர் ஆள்வதே முறைமை" என்று
வையக மெல்லாம் புளுகு மொழியும்
பெருநிறு வனங்கள் பரப்பு கின்றனர்?

* * *

அழகு நடைபோட்டு வந்தஎன் ஆயுள்
அறுபத் தெட்டுக்குப் பின்னும், என்ஆசை
வாழ்ந்திரு என்று வலிவும் தந்ததே.
என்தமிழ் அன்னை துன்பம் நீங்கித்
தூய்மை எய்தித் துலங்குதல் காண்பேன்.
என்தமிழ் நாடு தன்னுட்சி பெற்றுத்
துலங்குதல் காண்பேன் தமிழர்
நலங்காண் பேன்நான் நானில மதிலே!

[புரட்சிப்பாவேந்தர் தம் பிறந்த நாள்
அறிக்கையாகப் புதுவைத் "தமிழ்முரசுக்கு"
29—4—59-ல்வழங்கிய கவிதை]

நோஞ்சபுரம் அன்னம்மாள்

பெரிய கண்ணீர்த்துளியார்

சிறிய காஞ்சிபுரம்
5—5—59

அண்ணலே!

நீண்ட காலத்திற்குப் பிறகு மீண்டும் எனது கடிதங் காணும் நீங்கள் என்ன கருதுவீர்களோ எளியேன் அறியேன்! எனினும், இத்தனை காலம் எங்குச்சென்றிருந்தான் என்றுமட்டும் நினைப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

என்னசெய்வேன் 'நம்பிக்கை' என்றசொல்லே நம்மவர்க்காகாது என்று கருதும் நச்சுமனங் கொண்ட 'பிறவி' ஒன்று எனது 'எழுது கருவி'யையும் 'காகிதத்தையும்' (?) ஏமாற்றிப் பிடுங்கி வைத்துக்கொண்டு இன்னமும் ஏறுமாருகவே நடந்து வரும்போது-நான் எங்கிருந்து தங்களுக்குத் தொடர் கடிதம் தீட்டுவது!

இருந்தும், இனியும் நான் வாளாவிருப்பது - தங்களுக்குக் கடிதம் வரையாதிருப்பது - முறையாகாது எனக்கருதியே இரவல் காகிதம் பெற்று இக்கடிதம் தீட்டுகிறேன் - தொடர்ந்து எழுதலாம் என்றும் நம்புகிறேன்.

"மூடா உன் கடிதங்களையெல்லாம் பார்க்க ஏதடா நேரம் எனக்கு? அறியாயாடா நீ சென்னை நகரப் பேராட்சி மன்றத்தேர்வில் பெரும்பான்மைக் கட்சியாக எனது கட்சி வந்திருக்கிறதேடா! அதைக் கொண்டு நகராட்சியைக் கைப்பற்றி அடுத்து நடக்க இருக்கும் பொதுத்தேர்தலில் நாட்டாட்சியையே பிடிக்கத் திட்டம்போட்டு வரும் எனக்கு - உன் போன்ற சாதாரணங்கள் வரையும் கடிதங்கள் ஒரு பொருட்டா!"

நீங்கள் ஆயாசப் படலாம்.

ஆனல் அறிஞர் பெருமானே! அடியேன் அறிவேன் மாற்றுன் கடிதங்கள் என்ருலே தங்களுக்குக் கசக்கும் என்று, அதிலும் தங்கள் கருத்துக்களுக்கு மாறு தெரிவிக்கும் வகையானதான எதுவுமே தங்களுக்குப் பிடிக்காது என்பதையும் நான் உணர்வேன்; இருந்தும் ஏன் எழுத விரும்புகிறேன் என்ருல், நான் எழுதுவது கடிதம் மட்டுமல்லவே, கடிதம் என்ற பெயரிலே கதைகளையுமல்லவா அப்போதைக்கப்போது சொல்லி வருகிறேன்.

கதைகள் என்ருல்தான் உங்களுக்கு நிரம்பப் பிடிக்குமே - எதைச்சொன்னுலும் - யார் சொன்னுலும் - எந்த நேரத்தில் சொன்னுலும் அது கதை போல இருந்து "இனிக்கும் விஷயங்களும்" (?) அதிலே இருந்துவிட்டால் போதுமே விடிந்தாலும் விடமாட்டீர்களே - கேட்டுக் கொண்டே இருப்பீர்களே அந்த முறையில் திடீரென்று ஒரு கதை எனக்கு உதயமாகிவிட்டது, அதுவும் தங்களுக்குப் பிடிக்கும்வகையில் அமைந்த கதை எனவே அதைச் சொல்லாது இருக்க எப்படி என்மனம் இடந் தரும்...!

"வளர்த்தாதேடா எனக்கு நேரமில்லை விரைவில் சொல் கதையை?" என்கிறீர்களா?

பார்த்தீர்களா! கதையென்றதும் தங்களுக்கு வந்துவிட்ட உற்சாகத்தை, சொல்கிறேன், அதற்காகத்தானே இந்தக் கடிதமே! கதை புதியதேதவிர பாத்திரங்கள் பழையவர்கள் மட்டுமல்ல, தங்களுக்குப் பழக்கமானவர்களுங்கூட!

காதாநாயகன் சித்தோடு சின்னசாமியை உங்களுக்குத் தெரியும் - அவர் மனைவி நோஞ்சபுரம் அன்னம்மாளை நீங்கள் அறியமாட்டீர்கள் என்று சொல்லமுடியாது!

சின்னசாமியின் செல்வத்தையும் சிறப்பான வாழ்வையும் மட்டுமல்லாது அழகையுங்கண்டு மயங்கிஅவரது கரம்பிடித்து இணைந்து இல்லாளாகி, ஏறத்தாழ இருபது ஆண்டுகள் வாழ்ந்து ஏராளமாகக் குழந்தைகளைப்பெற்றுக்கொண்ட (அவருக்கே தான்) அன்னம்மாள் சில ஆண்டுகளுக்கு முன்பு சில்லரை சச்சரவுகளால் பிணங்கியதையும் பிறகு

குழந்தைகளிலே பலரை அழைத்துக் கொண்டு பிரிந்ததையும் நீங்கள் அறிவீர்கள்!

பிரிந்து வந்து நோஞ்சபுரத்திலேயே அமர்ந்து குழந்தைகளை வளர்த்ததையும் படிக்க வைக்க இயலாவிட்டாலும் - கணவனது பெருமைக்கேற்ப அவரது பெயரைச் சொல்வதற்கான தகுதியை உண்டாக்குவதற்கேற்ப - வளர்க்காவிட்டாலும் ஏதோ தன் போக்குப்படி சிலரை அங்குமிங்கும் எடுபிடிகளாகவும் - சிலரை சினிமாக் கொட்டகையில் வாயில் காப்போராகவும் - மற்றும் பலரை நாடகங்களிலே தடி தூக்குவோராகவும் – நாடாள்வோர்க்கு எடுபிடிகளாகவும் ஆக்கி – அவர்கள் கொண்டு வரும் பொருள்கொண்டு இல்லம் நடாத்தி அதிலும் ஏதோ இன்பங்கண்டு வாழ்ந்து வந்தாள்.

தந்தையைப் பிரிந்த தனயர்களும் அவர் பெயர் சொல்வதற்கேற்ப – வர்த்தகத் துறையிலோ அன்றி அறிவுத்துறையிலோ சிறப்பு எய்தாதது; மட்டுமல்லாது, அடாது செய்யும் பழிகாரர்களை எதிர்த்து நிற்கும் மனத்திட்பமும் இல்லாதவர்களாக ஆனாலும்; தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை என்பதற்கேற்ப அன்னை 'அன்னம்மாள்' பெயரை மூச்சுக்கு முன்னூறு முறை உச்சரித்து அவளைச் சுற்றிவந்து வணங்கி அடிபணிந்து அவள் காட்டிய வழிகளிலே சென்று பொருள் ஈட்டலானார்கள்.

அன்னம்மாள் பலகுழந்தைகளோடு கணவனை - சின்னசாமியை – விட்டுப் பிரிந்தாளேதவிர அந்தக் குழந்தைகள் அவருடையன அல்லவென்று அத்தனை துணிவாக இதுகாறும் சொல்லியதாக நாம் அறியோம். ஏன் நீங்களும் அறியமாட்டீர்கள்!

இன்னும் சமயம் கிடைத்தபோதெல்லாம் அந்த அம்மாள் தனது கணவனது பெருமையை மிகவும் சிறப்பாகவே பேசி வந்திருக்கிறாள்.

அந்த நாளில் அவரோடு அவள் வாழ்ந்த விதத்தையும் அடைந்த இன்பங்களையும் அடுக்கடுக்காக அவள் வாயால் சொல்லும்போது உண்மையிலேயே பலருக்குச் சின்னசாமி மீது கோபம் வரும்.

அழகுப்பதுமை அன்னம்மாள் அந்த அப்பாவியை மணந்து அதிசயக் குழந்தைகள் இத்தனையைப் பெற்று வளர்த்து அறிவூட்டி; சிறப்பும் செல்வமும் தேடித்தந்தும் கூட – அந்த அப்பாவி (சின்னசாமி) அன்னம்மாளை இப்படி விரட்டலாமா - வேதனைப் படவைக்கலாமா – வெட்கப்பட விடலாமா!

அந்தக் கிழம் விரட்டியுங் கூட இந்தக் கிளி இன்னமும் அவர்மேல் எத்தனை அன்பு வைத்திருக்கிறது. உத்தமிஎன்றால் இவள் அல்லவோ! பத்தினி என்ற பதமே இந்தப் பாவைக்காகத்தானே நமது அகராதிகளிலே புகுந்து கொண்டிருக்கிறது! என்று நினைப்பவர்களும் இல்லாமல் இல்லை. அதற்கேற்பவே அன்னம்மாளும் அங்குமிங்குமாகத் தனது கணவனது ஆதரவாளர்கள் இருக்குமிடங்களுக்குச் செல்லும் நேரங்களிலெல்லாம் –கணவனை நினைத்து ஒரு சொட்டுக் கண்ணீர்விட்டு "என்னை விரட்டிவிட்டார்; இன்று எப்படி இருக்கிறாரோ! அவரைக் கவனித்துக் கொள்ள அங்கு யார் இருக்கிறார்கள்!... அவர் கடையில் கூலிக்காக வேலைபார்ப்பவர்கள் எத்தனை காலம் அவரை வைத்துத் தாங்கி விடுவார்கள்! அவர்களுக்குக் கவலையும் பொறுப்பும் ஏது...?

தலைமை குமாஸ்தா 'தகராறு பிள்ளை' நான் இருக்கும்போதே ஏறுமாறாக நடந்து வந்தவர், இப்போது எப்படி இருப்பாரோ, வியாபாரம் எல்லாம் என்ன ஆச்சோ!"

என்று ஏங்கும்போது அதைக் கேட்கும் எவருமே அன்னம்மாளின்மேல் அன்பைச் சொறியாது இருக்கமாட்டார்கள். ஆனால் அதே அம்மாள் தான் இன்று எல்லோரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டாள்.

அம்மாள் அழைத்து வந்த பிள்ளைகளிலே ஒருவனுக்குச் சென்னை நகரசபையிலே குமாஸ்தா வேலை கிடைத்துவிட்டதாம். இந்த ...ப சர்க்கார் உத்தியோகம் அம்மாளின் அறிவை அறவே போக்கடித்துவிட்டது.

இப்போது அம்மையார் கூறுகிறார் தனக்குச் சித்தோடு சின்னசாமியை யார் என்றே தெரியாது என்று!

உண்மை ஆச்சரியப்படாதீர்கள்! தனது குழந்தைகள் எல்லாம் யாரோ 'போகராயர்' என்பவருக்குத்தான் பிறந்ததாம். போகிற இடத்திலெல்லாம் தலையிலே அடித்துச் சத்தியம் செய்கிறாள். - நகரசபை உத்தியோகம் ஏற்றுக்கொண்ட பிள்ளையும் போகராயர் மகன் பொன்னுசாமி என்றே பெயர் குறித்துக்கொண்டு உள்ளே புகுந்து விட்டான்,

அவன் என்ன செய்வான் அப்பாவி! அம்மாப் பிள்ளை. அம்மா சொன்னதை அப்படியே கக்குவதைத் தவிர வேறு என்ன செய்வான்! இதற்கு

என்ன சொல்கிறீர்கள்! நம்பிக்கையையும் உண்மையையும் நாசமாக்கி மறைக்கும் வஞ்சகர்களை நாம் அறிவோம்! ஆனால் அற்பக் குடும்பத் தகராறு காரணமாக ஆளனைவிட்டு வந்த அம்மையார் - ஆண்டுக்கணக்கிலே அவரோடு வாழ்ந்தவர் - அழகு குழந்தைகளை அவருக்கே பெற்றுக் கொஞ்சி மகிழ்ந்தவர் - இன்று அத்தனையையும் மறந்து, அன்பைக் கொன்று, அறிவுக்கு விடைகொடுத்து விட்டு, மாற்றான் ஒருவனுக்குத் தனது மதலைகள் பிறந்ததாகச் சொல்கிறாளே! இதை நீங்கள் எண்ணும்போது உங்கள் இதயம் எப்படியண்ணா இருக்கிறது?

கணவன் மீது உள்ள ஆத்திரத்தைக் காட்ட அம்மைக்குக் கிடைத்த வழி இதுதானா? — இதனால் அவரைவிட அவளுக்கு அல்லவா இழிவும் பழிவும் ஏராளமாகச் சேரும். இதுகூடவா அம்மைக்குப் புரியாது?

சின்னசாமி இருக்கும்போதே - செல்வவானாக - அம்மையைவிட ஆயிரம் மடங்கு சிறப்பு உள்ளவராக, இன்னமும் அவர் ஊரிலே உலவிவரும் போதே - அம்மை இப்படி மாறாத அவமானத்துக்கு ஆளாகிவிட்டார்கள் என்றால்,

நாளை சின்னசாமி மறைந்துவிட்டால் அம்மை எப்படி இருப்பார்கள், அவள்பெற்ற செல்வங்கள் என்ன செய்வார்கள். அந்தோ நினைக்கவே நெஞ்சம் எரிகிறதே!

"நிறுத்தடா நிறுத்து, நீட்டிக்கொண்டே போகாதே. யாரோ சிறுமதிபடைத்த சிற்றிடையாள் எதற்கோ எங்கோ ஏறுமாறாகச் சொல்லி - தனக்கு இழிவைத் தேடிக்கொண்டாள் என்றால், இதைப் பேரய் பெரிய கதையாகக் கருதிக் கொண்டு என்னிடம் சொல்ல வந்து விட்டாயே" என்பீர்கள் நீங்கள்.

காரணம் இல்லாது எப்போதுமே எதையுமே நான் யாரிடமும் சொல்லமாட்டேன் என்பதை நீங்கள் அறிவீர்கள்!

"நம்முடைய தோழர்கள் எல்லாம்நகர மன்றத்திலே நுழைகிற, நேரத்தில் உச்சியிலிருந்து பாதம் வரையில் தொங்கக்கூடிய நல்லதோர் மலர் மாலையைத் தாயாரித்து, நகரசபைக் கட்டிடத்திற்கு எதிரிலே கவனிப்பாரற்று நிற்கின்ற - தமிழர்களைக் கை தூக்கிவிட்ட சர் தியாகராயர் சிலைக்கு அணிவித்து, அவரது பொன்னடிகளைத் தொழ வேண்டும். "மகானே! நீங்கள்தான் தமிழர் சமுதாயத்திற்கு முதன் முதல் அறிவூட்டினீர்கள்; வாழும் மார்க்கத்தைக் கற்றுக் கொடுத்தீர்கள்; உங்களது வழிவந்த நாங்கள், நீங்கள் பட்ட தொல்லைகளைவிட அதிகமாக அவதிப் பட்டோம். நீங்களாவது செல்வச் சீமான்: நாங்கள் பஞ்சை பராரிகள்! ஆனால் சீமான்கள் உங்களை மதிக்க மறந்தார்கள். ஏழைகளாகிய நாங்கள் உங்களை மறக்கவில்லை!" என்று வீர வணக்கம் செலுத்திவிட்டு உள்ளே நுழைந்து கடமையாற்ற வேண்டுகிறேன்.

அன்புள்ளவரே!

மேலே காணும் அழகு வாசகங்களை அதற்குள்ளாகத் தாங்கள் மறந்திருக்கமாட்டீர்கள்!

தங்களது செவ்விதழ்கள் (வெற்றிலைக்காவியால் அல்ல) சிந்திய அமுத வாசகங்கள் அல்லவா அவைகள்!

சென்னைப் பெருநகரமன்றில் தங்களவர்கள் நாற்பத்தி ஐந்து பேர்கள் பெற்ற வெற்றியைக் கொண்டாட கடற்கரையில் தாங்கள் கூட்டியகூட்டத்திலே இறுதியாகப் பேசிய தாங்கள் இறுதியாகப் பொழிந்தது அல்லவா அவைகள்!

தந்தை பெரியாரோடு ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு முன்பு தொடர்பு கொண்டு இருபதாண்டுகள் வரை இடையறாது இருந்த - அவர் தந்த கருத்துக் கருவூலங்களை இதயத்திலே ஏற்று, கருக்கொண்டு - பின்னர் அவைகளுக்கு நாட்டிலும் ஏட்டிலும் உருக்கொடுத்து உலவவிட்ட நீங்கள் - இன்னும் ஒரு சுயமரியாதைக்காரன் என்று சொல்லிக் கொள்வதிலே பெருமை கொள்ளும் நீங்கள்! —

பெரியார் பாசறையிலே பயின்று வெளியேறியவன் என்று மார்தட்டிக் கொண்ட நீங்கள்!

தந்தை பெரியாரை சாக்ரட்டீசோடும் மற்றும் புதிய சமுதாயம் படைத்த மேதைகளோடும் ஒப்பிட்டு மாமேதையென்று மேடை தவறாது முழங்கிய நீங்கள்!

கற்புடைப் பெண்டிர் எத்தனைதான் கருத்து வேறுபாடு இருந்தாலும் கணவன் என்றதும் கடவுள் அல்லவோ அவர் என்று கருதுவதுபோல - கருத்து மாறுபாடு கண்ட காலத்தில் கூட தமிழர்க்குப் புதுவாழ்வு கொடுத்த பெருந்தகை பெரியாரன்று என்று எழுதியும் பேசியும் வந்த நீங்கள்!

ஆயிரம் ஆயிரமாண்டுகளாக ஆரியத்திற்கு அடிபணிந்து கிடந்த தமிழர் சமுதாயத்தைத் தட்டி யெழுப்பி உணர்வூட்டி - ஒளியூட்டி உருக்குலைந்த நிலைமாற்றி அமைத்துக் கொடுத்த ஓரே சிற்பி பெரியார்! அவரதுசிடன் நான் என்று சொல்வதிலே பெருமைகண்ட நீங்கள்!

எப்படியண்ணா மனம் வந்து இன்னொருவரை தமிழர் சமுதாயத்துக்கு முதன் முதல் அறிவூட்டியவர் என்றும்; வாழும் மார்க்கத்தைக் கற்றுத் தந்தவர் என்றும், சொல்லி விட்டீர்கள்!

தியாகராயரைக் குறைகூற வேண்டும் என்று நான் சொல்லவில்லை - சொல்லமாட்டேன் - தியாகராயரைப் புகழ வேண்டுமானால் அதற்கு வார்த்தைகளா இல்லை?

அறிஞராயிற்றே தாங்கள்! அழகுத்தமிழ் தாங்கள் நினைத்தால் கைகட்டி நின்று கட்டியங்கூறும் என்று சொல்கிறார்களே!

தியாகராயரைப் புகழ்வதற்குத் தமிழிலே வார்த்தைகள் கிடைக்காமலா "தமிழர் சமுதாயத்துக்கு முதன் முதல் அறிவூட்டியவர்" என்று சொல்லி விட்டீர்கள்! உம்!

நீங்கள் எதைச் சொல்லி இருந்தாலும் பொறுக்கும் இதயம் எனக்குண்டு. ஆனால் தமிழர் சமுதாயத்துக்கு முதன்முதல் அறிவூட்டியவர் என்ற வார்த்தைகளைக் கேட்கவே இயலவில்லையே!

இருக்கட்டும். பெரியாரை மறைக்க வேண்டும் அல்லது குறைக்க வேண்டும் என்ற முறையற்ற அழுக்காறு ஒன்றையே உள்ளடக்கிய இழுக்கான எண்ணம் தங்களுக்கு இருப்பதாகவே வைத்துக் கொண்டாலுங்கூட அதற்காக இன்னொருவரைப் பெருமைப்படுத்தும்போது — பொருளோடு அல்லவா வார்த்தைகளை உதிர்த்திருக்கவேண்டும்!

நாளைபொருவன் கேட்டால் என்ன சொல்வது என்ற எண்ணத்தோடு - அறிவை முன்வைத் தல்லவா பேசி இருக்க வேண்டும்!

உங்கள் பேச்சிலே அறிவு ஏன் ஒளிந்து கொள்ளவேண்டும்? விவேகம் ஏனோ விடை பெற்றுக்கொண்டு போய்விட்டது!

முதன்முதல் அறிவூட்டியவர் என்றால் - முதன் முதல் என்ற வார்த்தைக்கு என்ன பொருள்!

தமிழர் சமுதாயம் தோன்றிய அப்பொழுதேயா அல்லது சங்கம் கண்ட காலத்தா?

- ஆரியம் நுழைந்த காலத்தா?

வடவர் வருத்திய போழ்தா?

ஆங்கிலேயர் வந்த பின்னரா?

எந்த காலத்தை அண்ணா குறிப்பிட்டீர்கள்?

விபரம் புரியாதவன் கேட்கிறேன் விடை கூறுங்கள்?

அற்பனுடைய கேள்வி என்று அலட்சியங் காட்டாதீர்கள்.

இன்று நான் கேட்கிறேன் - என் குரலில் வலுவில்லாதிருக்கலாம் ஆனால் பொருள் இருக்கிறது! நாளை நாடு கேட்கும், அப்போது வலுமட்டுமல்ல - வார்த்தைகளே வேறு தோரணையில் இருக்கும்!...

எனவே இப்போதே சொல்லுங்கள்! பாவம் எங்கே சொல்லப்போகிறீர்கள், எப்படிச் சொல்வீர்கள் - முடியும்!

வள்ளுவரும், புத்தரும், ராமலிங்கரும், சித்தர்களும் சாதிக்க முடியாத பெரும் காரியத்தைச் சாதித்து ஆரியப் பிடிப்பில் உழன்று அழிந்து அணுவணுவாகச் சிதைந்துபோன தமிழர் சமுதாயத்துக்கு முதன்முதல் அறிவூட்டியவர்! வாழ வழிகாட்டியவர்! எம் தலைவர் பெரியார்! என்று ஆயிரமாயிரம் மேடைகளில் முழங்கிவிட்டு - பலப்பல புத்தகங்களிலே எழுதிவிட்டு கேவலம், அற்பத்திலும் அற்பம். இந்த சென்னை நகரசபை வெற்றி !—

—"இருபத்திரண்டுலட்சம் மக்கள் வாழும் பெருநகரில் வாக்காளர்களாகப் பதிவுபெற்றவர்கள் பத்து லட்சம். அதிலே நீங்கள் பெற்றது 1,48,712 (ஒன்றரை லட்சத்துக்கும் குறைவு)

இருபத்திரண்டு லட்சம் மக்களில் - ஒன்றரை லட்சம்பேர் தங்களுக்கு அனுமதி கொடுத்து விட்டார்கள், நீங்கள் பெரும் வெற்றி பெற்றுவிட்டீர்கள்.

- இதுதான் இன்றுள்ள ஜனநாயகம்!

இந்த ஜனநாயகத்தைத்தான் எங்கள் தந்தை பெரியார் எதிர்க்கிறார். காமாலைக் கண்ணர்களுக்கு அது கசப்பாக இருக்கிறது.

— இந்த வாதங்களை நான் இப்போது கிளப்ப வில்லை நேரம் வரும். அப்போது எழுதுகிறேன்.

இந்த அற்ப வெற்றியிலேயே இப்படி அடி புரண்டு விட்டீர்களே!

அதே மேடையிலே ஆரம்பத்திலே தம்பியர்களுக்கு உபதேசம் செய்த நீங்கள் – ஏன் உங்களை மறந்து விட்டீர்கள்?

நோஞ்சபுரம் அன்னம்மாள் கணவனை மறந்து மாற்றானைக் காட்டியதற்கும் தங்களது பேச்சுக்கும் ஏதாவது வேறுபாடு இருக்கிறதா?

எங்கே இருக்கிறது? முடியும்?

அன்னம்மாள் அல்ல நீங்கள். அவளுக்குவரும் இழிவு குடும்பத்தோடு போய்விடும். – நீங்கள் - ஒரு அடிமை நிலையையே மாற்றிப் புதுவாழ்வுக்காகப் போராடப்போவதாகச் சொல்கிறவர் நீங்கள்!

நீங்கள் அடைந்த வெற்றி அற்பம்! அடைய வேண்டியதை நினைக்கும்போது மிக மிக அற்பம்! இதுவும் நீங்களே கூறியவை.

ஆகவே அதற்குள்ளாகவே நன்றி மறப்பதிலும் உண்மையை மறைப்பதிலும் முழுமூச்சாக ஈடுபட வேண்டாம் என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

"அப்படித்தானடா செய்வேன்! என் செல்வாக்கு எவ்வளவு பெரியது தெரியுமா?"

என்றால்;

இப்படிக் கொக்கரித்தவர்கள் எல்லாம் செல்லும் வழக்கமான பாதையிலேயே நீங்களும் போகிறீர்கள் – போங்கள். நான் என்ன சொல்வது – நாளை நாடு சொல்லும்!

அன்னம்மாள் கதைமுடிந்தது அல்ல – தொடர இருப்பது தொடரும், பிறபின்னர்.

அன்புள்ள,

கறுஞ்சட்டை.

நன்றி

கவிஞரவர்களின் பிறந்தநாளை ஒட்டி (30-4-59) வெளி நாடுகளிலிருந்தும், வெளியூர் – உள்ளூரிலிருந்தும் அன்பர்கள் பலர் கடிதம் மூலமாகவும், தந்தி மூலமாகவும், நேரில்வந்து கண்டும் தத்தமது வாழ்த்தைத் தெரிவித்துக் கொண்டனர். அவர்களுக்கெல்லாம் எங்களது மனமுவந்த நன்றி உரித்தாகும்.

புதுவைத் தி. க. தோழர் வலங்கைக் கலைமணி அவர்கள் பாவேந்தர் அவர்களின் பிறந்தநாள் நினைவாகவும், குயில் வளர்ச்சிக்கெனவும் 2–ரூபாய் தந்துள்ளார் அவருக்கும் எங்களது நன்றி உரியதாகும்.

குயில்

: ஆண்டு மலர் :

★ கண்ணையும் கருத்தையும் கவரும் மூவண்ண முகப்பு.

★ இயக்கத் தலைவர்களின் கட்டுரைகள்.

★ புலவர் குழு உறுப்பினர்களின் எழுத்தோவியங்கள்.

★ நெஞ்சையள்ளும் சிறுகதைகள் ஆகியவற்றைத் தன்னகத்தே தாங்கி உங்களுக்குப் பல்சுவை விருந்தளிக்க 2—6—59 அன்று

வெளிவருகிறது!

விற்பனையாகிறது!

தமிழ் முரசு

பாவேந்தர் பாரதிதாசன்

பிறந்தநாட் சிறப்பிதழ்

முதலமைச்சர் காமராசர், தந்தை பெரியார், ஆதித்தனார் வாழ்த்துரைகளும், பாவேந்தரின் கவிதையும் அருமையான கட்டுரைகளும், எண்சுவைக் கவியரங்கமும் இதழை அணிசெய்கின்றன!

புரட்சிக்கவிஞரின் திருஉருவப்பட மேலட்டை

விலை 25 புதுக்காசு. கழிவு 25 %

தமிழ்முரசு அலுவலகம்,

—புதுச்சேரி—

மலைநாட்டு மங்கை

ஓலக்காசி இராம. தமிழ்ச்செல்வன்

குறிஞ்சி வள நாட்டின் பேரழகன் அவன் அவளோ அந்த மலை நாட்டு மங்கை – பேரழகி!

ஒரு நாள் அவனை அவள் சந்தித்தாள்– அழகை அழகு சந்தித்ததில் வியப்பொன்றும் இல்லையே! விழியோடு விழி காதல் மொழி பேச இருவரும் ஊமைகளாயினர்!

அடுத்த நாள் –

அவள் குயிலாகப் பாடினாள் – மானாக ஓடினாள் – மயிலாக ஆடினாள்! அவனோ, அவளை– அவள் அன்பை நாடினான்! – இருவரும் மலரும் மணமுமாயினர். அவள் தோழியோ, இந்நிகழ்ச்சி கண்டு – தலைவி ஏன் நம்மிடம் இந்த செய்தியைக் கூறவில்லை? எனத் தனக்குத் தானே ஒரு கேள்வியைப் போட்டுக் கொண்டாள்.

கதிர் மறைய – நிலவு எழும் அந்திநேரம்! தோழி தனியே அமர்ந்திருந்தாள் – தலைவி வந்தவள் – கேலியாகச் "சிலையாகும் அளவுக்கு என்ன வருத்தமோ" என்றாள்.

தோழி ஆரம்பித்தாள் – "நான் இந்த மலை நாட்டின் அழகரசி! – எனக்கிருக்கும் கவலை உனக்கிருந்தால் தெரியும்" என்று தன் முகத்தைப் பெண்களுக்கே உரிய தனி பாவனையில் வெடுக்கெனத் திருப்பிக் கொண்டாள்.

"கவலையா? அடடா என்ன கவலையோ" எனக்கூறிய படியே தலைவி தோழியின் அருகில் அமர்ந்தாள்.

தோழி கிளியாகப் பேசினாள்

"நீலப்பூ விழியாளே – ஒரு நாள் – தினைப் புனங் காக்கச் சென்ற நான் – என் பின்னே, எடுத்த மார்பினனும் – பூத் தொடுத்த மாலை கழுத்தணியப் பெற்றவனும், ஒருவன் வரக்கண்டு சடக்கென நின்றேன்! அவனோ – பிடித்த வில் தரையில் விழுவதும் அறியானாய் – அப்பக்கம் இப்பக்கம் திரும்பி ஏதும் தெரியான் போல் நடித்தான்."

"இப்படி நிகழ்ந்தது ஒரு நாள் இரு நாளல்ல பல நாள்!"

"அவன் என்னைப் பார்ப்பான் – நான் அவனைப் பார்ப்பேன் – ஏதோ சொல்ல வாயெடுப்பான் – வாய் அசையும் – ஒலி வராது. எனக்குமா அப்படி வரவேண்டும்? சில நாளில் அவனுக்காகவே நான் பிறந்திருப்பதாக உணர்ந்தேன்! அவனும் அப்படித்தான் – எனக்காகவே அவன் பிறந்ததாக நினைத்திருக்கக் கூடும். இதை அவன் என்னிடம் சொல்லாவிட்டாலும், அவனுடைய முகக் குறிப்பால் நானே அறிந்து கொண்டேன்!

ஒரு நாள் தினைப்புனத்தருகில் உள்ள நீரோடை அழகை வியந்தவாறே ஊஞ்சல் ஆடிக் கொண்டிருந்தேன்! என்றும் போல அவன் அன்றும் வந்தான். ஊஞ்சலை நிறுத்தி விட்டு "ஐயா–கால் எட்டவில்லை–ஊஞ்சலைச் சற்று ஆட்டிவிட முடியுமா என்றேன். அவனோ–அதற்காகவே வந்தவன்போல 'நல்லது–இதோ' என்ற இருசொல்லோடு பேச்சை நிறுத்தி, ஊஞ்சலை ஆட்டத் தொடங்கினான்–ஊஞ்சல் அவன் கைபட்டதாலோ என்னவோ–அங்குமிங்கும் பறக்கும் சிட்டாயிற்று."

–"நான்என்ன செய்தேன்தெரியுமா வீழுபவள் போல திடீரென அவன் மார்பில் சாய்ந்தேன்– அவனோ, என்னை மணந்தவன்போல, மார்போடு அணைத்துக் கொண்டான். மூடிய விழியைத் திறந்தால், 'ஆடியது போதும் வீட்டுக்குத் திரும்பம்மா' எனக்கூறி விடுவானோ என்னவோ என அஞ்சி– அந்த அரவணைப்பில் இந்த உலகையே மறந்து கிடந்தேன்–கிடந்தேனா? ......"

இதுவரைகேட்டுக்கொண்டு அமைதியாக அமர்ந்திருந்த தலைவி சரேலென எழுந்தாள்! தோழியின் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளி, "இதெல்லாம் உனக்கெப்படியடி தெரியும்? தெரியாதென்றல்லவா இருந்தேன்" என்றாள் வியப்போடு.

தோழியோ – "மலைக்குத் தெரியாமல்–அருவி எங்கம்மா ஓடிவிடும்" என்றாள்!

– இதுபோன்ற நிகழ்ச்சிகளின் படப்பிடிப்பே கலித்தொகை! அந்தப் படப்பிடிப்பில் இது ஒரு காட்சி – இதுபோன்றே– ஒவ்வொரு காட்சியிலும் காணலாம் கருத்தின் மாட்சி!

"கயமலர் உண்கண்ணாய்! காணாய்; ஒருவன்

... ...

அங்கண் உடையன் அவன்!"

என்ற தேன் தமிழ்ப் பாட்டே மேற்கண்ட நிகழ்ச்சியின் கருவூலம்!

<+>

குயில்

Regd No. M. 7030.

தமிழர் கடன்

ஏழைத் தமிழன் வாழ வேண்டும் மாமா - அவன்
இட்டலிக் கடையில் உண்ண மறுக்க லாமா ?
கூழா னாலும் தமிழன் விற்பது நமது - சுவை
குறைந்திட் டாலும் அதுநமக்கே அமுது
தாழ்வாய் நமைத் தமிழன்நினைப்ப தில்லை - அந்தத்
தமிழனுக் கேன் தமிழர்களால் தொல்லை ?
பாழாக்கிடும் நமை அயலான் நெஞ்சு - தீயன்
படைப்ப தமுதம் என்று லுமது நஞ்சு !

தமிழன் கடையில் தமிழன் உண்ண வேண்டும் - பிற
தறிதலைகள் கடையை ஒழிக்க வேண்டும் ;
தமிழர்களால் தமிழர் வாழ வேண்டும் -நமைத்
தாழ்த்து வாரை வீழ்த்திடத்தான் வேண்டும் !
தமிழன் கடை தமிழரின் தாய் வீடு - பிற
சழக்கர் கடை நமக்குச் சுடு காடு !
தமிழ ருணவு தமிழ ருக்குத் தாய்ப்பால் - பிற
சாக்கடைகள் உணவு நமக்கு நோய்ப்பால் !

நூற்றுக் கிரு நூறுவரு மானம் - கெட்ட
நாலுக் கதை கொட்டுவதா மானம் ?
காற்றுமழை கலந்தடிக்கும் போதும் - அவன்
கடைக் குறட்டில் ஒதுங்குவதும் தீதாம் !
வேற்றுவனை வேரறுத்தல் நன்று ? - அவன்
விற்பனையை ஓங்கவைத்தல் நன்று ?
சாற்றவந்தேன் முத்தானஎன் அத்தான் - தனித்
தமிழர்களின் நற்கடமை யைத்தான் !

—○✱○—

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன், புதுச்சேரி.
அச்சிடுவோர்: மா. தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.